# தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை

**மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி – 620001**

## கழிவு செய்யப்பட்ட வாகனங்கள் ஏல விற்பனை அறிவிப்பு

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறையை சார்ந்த கழிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களை ஒப்பந்தப்புள்ளி மற்றும் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்ய கீழ்கண்டவாறு திட்டமிடப்படுகிறது.

| வ. எண் | விவரம் | நாள் மற்றும் நேரம் |
|---|---|---|
| 1. | விண்ணப்பம் வழங்க ஆரம்ப நாள் | 01.09.2022 காலை 10.00 மணி முதல் |
| 2. | விண்ணப்பம் வழங்க கடைசி நாள் | 19.09.2022 மாலை 04.00 மணி வரை |
| 3. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெற கடைசி நாள் | 20.09.2022 காலை 10.00 மணி வரை |
| 4. | ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் நடைபெறும் நாள் | 20.09.2022 காலை 11.00 மணி |
| 5. | ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலம் நடைபெறும் இடம் | துணை இயக்குநர் அலுவலகம்,<br>கண்டோன்மெனட்,<br>தீயணைப்பு மீட்புப்பணிகள்துறை &<br>தலைமையக தீயணைப்பு மீட்புப்பணி நிலையம்,<br>திருச்சிராப்பள்ளி – 620001. |

ஒப்பந்தப்புள்ளி மற்றும் பகிரங்க ஏலம் குறித்த முழுமையான நிபந்தனைகள், வாகன பட்டியல் ஆகியவை விண்ணப்ப படிவத்துடன் **துணை இயக்குநர் அலுவலகம், மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி – 620001** என்ற முகவரியில் முகவரியில் வழங்கப்படும். மேலும் விவரங்களுக்கு 9445086391, 9445086394, 0431-2462824, 0431-2462613/ www.tnfrs.com

**துணை இயக்குநர்,**
**மத்திய மண்டலம்.**

**(Width 10 cm X Height 5 cm)**

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை

மத்திய மண்டலம், துணை இயக்குநர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி

**கண்டனம் செய்த தீயணைப்புத்துறை மோட்டார் வாகனங்கள் ஏல விற்பனை அறிவிப்பு ஏல நாள் : 20.09.2022 காலை 10.00 மணி**

திருச்சிராப்பள்ளி தலையிடமாக கொண்ட மத்திய மண்டலத்தை சார்ந்த பத்து மாவட்டங்களில் உள்ள பயன்பாட்டில் இருந்து கண்டனம் செய்யப்பட்டுள்ள Water Tender – 17, Water lorry – 1, Ambulace – 8, Car – 2, Two wheeler – 1 ஆகமொத்தம் 29 வாகனங்களை 20.09.2022 அன்று காலை 10.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாவட்ட தீயணைப்பு மீட்புப்பணி நிலையத்தில் வைத்து பொது ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. ஏலம் எடுக்க விரும்புவோர் திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்ட அலுவலகங்களில் டெண்டர் படிவம் பெற்றுக்கொள்ளலாம். 19.09.2022 அன்று மாலை 4.00 மணி வரை விண்ணப்ப படிவம் வழங்கப்படும்.

விண்ணப்பத்துடன் வாகனம் நிறுத்திவைக்கப்பட்டுள்ள Broucher பெற்று வாகனங்கள் ஏலதாரர்கள் பார்வையிடலாம். வாகனங்களை ஏலம் எடுக்க விரும்புபவர்கள் ஏலம் நடைபெறும் நாளான 20.09.2022 காலை 10.00 மணிக்குள் ஆதார் அடையாள அட்டையுடன் வாகனத்திற்கான முன்பணம் செலுத்தி, பெயர்களை பதிவு செய்துக்கொள்ள வேண்டும். ஏலம் நடைபெறும் இடம் : திருச்சிராப்பள்ளி மாவட்ட தலைமையிட தீயணைப்பு மீட்புப்பணி நிலையம், திருச்சிராப்பள்ளி ஏலத்தொகையுடன் சரக்கு மற்றும் சேவை வரி கட்டணமாக 18% சேர்த்து முழு தொகையும் செலுத்தி வாகனத்தை பெற்றுக்கொள்ளலாம் என மத்திய மண்டல துணை இயக்குநர் அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், தகவலுக்கு கீழ்கண்ட முகவரியில் நேரில் தொடர்பு கொள்ளலாம். துணை இயக்குநர் அலுவலகம், கண்டோன்மென்ட், தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை & தலைமையக தீயணைப்பு மீட்புப்பணி நிலையம், திருச்சிராப்பள்ளி - 620001

தொலைபேசி எண் : 9445086391, 9445086394, 0431-2462824,

துணை இயக்குநர்,
தீயணைப்பு மீட்புப்பணித்துறை,
வடமேற்கு மண்டலம், வேலூர்,
(மு.கூ.பொ) துணை இயக்குநர்,
மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி

# <u>தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை</u>

## <u>கழிவு செய்யப்பட்ட வாகனங்களை ஏலம் எடுப்பதற்கான நிபந்தனைகள்</u>

1) பகிரங்க ஏலப்பதிவு மற்றும் முன்பணம் செலுத்தும் நாள் : <u>01.09.2022</u> காலை <u>10.00</u> மணி முதல் <u>20.09.2022</u> காலை <u>10.00</u>..மணி வரை இடம் திருச்சிராப்பள்ளி மத்தியமண்டலம், துணை இயக்குநர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி .

2) டெண்டர் படிவத்துடன் டெண்டர்தாரர் எந்த வகையான வாகனத்திற்கு டெண்டர் அளிக்க விரும்புகிறாரோ அந்த வகையான வாகன விவரங்கள் மட்டுமே அளிக்கப்படவேண்டும்.

**<u>டெண்டர் படிவத்தின் விலை:-</u>**

1) கனரக வாகனங்கள் (HMV) - ரூ.200/-

2) வேன் / கார் / ஜீப் (LMV) - ரூ.100/-

3) ஒவ்வொரு வாகனத்திற்கும் ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனி படிவத்தில் அந்தந்த வாகனத்திற்கான பிணைமுறித்தொகைக்கு (Deposit) குறையாத அளவில் வங்கியில் **<u>06.09.2022</u>** தேதி முதல் எடுக்கப்பட்ட வங்கி வரைவோலையை (Demand Draft) இணைத்து முத்திரையிடப்பட்ட உறையில் வைத்து அனுப்ப வேண்டும். மேலும், ஏலத்திற்கான கேட்பு வரைவோலை Demand Draft – in the name of Deputy Director, Trichirapalli, ACCOUNT NUMBER : 30957405972, SBI, Main Branch, Trichirapalli IFS CODE : SBIN0000930 என்ற முகவரிக்கு எடுக்கப்பட்டு, திருச்சிராப்பள்ளியில் மாற்றத்தக்கதாக இருக்க வேண்டும்.

4) ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்படும் **<u>வாகனத்தின் வகை (Type of Vehicle) வாகனத்தின் பதிவு எண், ஏல அட்டவணை வரிசை எண் ஆகியவற்றை பெரிய எழுத்துகளில் எழுதி தெரிவிக்க வேண்டும்.</u>** ஒப்பந்தப்புள்ளிகள், மத்திய மண்டலம், துணை இயக்குநர் அலுவலகம், கண்டோன்மென்ட், திருச்சிராப்பள்ளி பின்கோடு – 620 001 என்ற முகவரிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் மேலே வரிசை எண்: 3-ல் குறிப்பிட்ட கடைசி நாளுக்குள் கிடைக்குமாறு அனுப்பப்படவேண்டும். அதற்கு பின் காலதாமதமாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணத்தை கொண்டும் ஏற்கப்படமாட்டாது. மேலும், **<u>உறையின் மீது மேற்படி விவரங்களை எழுதி தெரிவிக்கப்படாத உறைகள் திறக்கப்படமாட்டாது,</u>** ஏலத்தில் சேர்த்துக்கொள்ளப்படவும் மாட்டாது.

5) ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டிய பிணைமுறித்தொகையின் (EMD Deposit) விவரம் பின்வருமாறு:

1) **கனரக வாகனங்கள் (HMV) - ரூ.5000/-**

2) **வேன் / கார் / ஜீப் (LMV) - ரூ.2000/-**

இது தவிர ஒப்பந்தப்புள்ளி கோராமல் நேரடியாக பொது ஏலத்தில் மட்டும் கலந்துக்கொள்ளும் ஏலதாரர்கள் மேற்குறிப்பிட்ட பிணைமுறித்தொகையை பணமாகவோ அல்லது வரைவோலையாகவோ செலுத்தலாம்.

6) பிணைமுறித்தொகைக்கான வங்கி வரைவோலையின் பின்புறத்தில் ஏலதாரரின் பெயர், ஏல அட்டவணை வரிசை எண் மற்றும் வாகன எண் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும் **(ஏலதாரர் கையொப்பம் இடக்கூடாது).**

7) பிணைமுறித்தொகைக்கான வங்கி வரைவோலைகளை மற்ற ஏலதாரருக்கு செலுத்த வேண்டிய தொகைக்கு மற்றும் **சரக்கு மற்றும் சேவை வரி போன்றவற்றிற்காக மாற்றப்படுத்தல் ஏற்கப்படமாட்டாது.**

8) விற்பணைக்காக பட்டியலிட்டு (கூடியமட்டும்) தெரிவிக்கப்படும் வாகனங்களின் பதிவு எண்/ தயாரிப்பு/ மாடல் மற்றும் இருக்குமிடம் அந்தந்த வாகனங்களின் ஏல அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாகனத்திற்கு ஏல ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புவோர் எந்தவொரு வேலை நாட்களிலும் வாகனங்களை சென்று பார்வையிடலாம். மேலும், வாகனங்கள் உள்ளது உள்ளபடியேயான நிலையில் (As is where is Basis) விற்பனை செய்யப்படுகிறது.

8) வாகனங்களுக்கு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் கொண்ட உறைகள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஏலதாரர்கள் முன்னிலையில் மத்திய மண்டலம், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை அலுவலகத்தால் விளம்பரத்தில் குறிப்பிட்ட இடம் நாளில், காலை 10.00 மணி அளவில் திறக்கப்படும்.

9) அதிகபட்ச விலைப்புள்ளிகள் அளித்துள்ள டெண்டர்தாரர் அல்லது பகிரங்க ஏலம் எடுத்தவர் பெயர் தெரிவிக்கப்பட்டவுடன் அவரால் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் தொகையை வங்கி வரைவோலையாக அல்லது ரொக்கமாக ஏலம் விடப்படும் தேதியன்று மாலை 5.00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் செலுத்தப்படவேண்டும். தவறும் பட்சத்தில் ஏலதாரர் செலுத்தியுள்ள EMD-க்கான வங்கி வரைவோலை பறிமுதல் (Forefeit) செய்யப்பட்டு அரசுகணக்கில் செலுத்தப்படும்.

10) எந்தவொரு வாகனத்திற்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்படாவிட்டால் ஏலதாரர் செலுத்தியுள்ள பிணைமுறித்தொகை ஒப்பந்தப்புள்ளி உறையில் அவர் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு தபாலில் திருப்பி அனுப்பிவைக்கப்படும். முகவரி இல்லாத பிணைமுறித்தொகை பறிமுதல் செய்து இத்துறையின் தலைப்பில் செலுத்தப்படும்.

11) ஏலதாரார் எந்தவொரு வாகனத்திற்கும் முழு ஏலத்தொகையை செலுத்திய நாளிலிருந்து இரண்டு தினங்களுக்குள் ஏலத்தொகை **மீதான சரக்கு மற்றும் சேவைவரி செலுத்தி வாகன விடுப்பு உத்தரவினை பெற்றுக்கொள்ள வேண்டும்.**

12) பிணைமுறித்தொகை, ஏலத்தொகை, சரக்கு மற்றும் சேவைவரி மொத்தம் - 3, வரைவோலைகள் மட்டும் செலுத்தலாம், மேலும், ஆறு, வரைவோலைகள் கூடுதலாக செலுத்தும் நிலையில் (Processing Fees) ஆக ரூ.50/- (ரூபாய் 50 மட்டும் ரொக்கமாக கணக்கு அலுவலக பிரிவில் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டு ரசீது நகலுடன் வங்கி வரைவோலைகளில் சேர்த்து அலுவலகத்தில் ஒப்படைக்கவேண்டும்). மேலும் ஆறு வங்கிவரைவோலைகளுக்கு மேல் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

13) ஏலதாரர் நிபந்தனைகளில் தெரிவித்துள்ள காலகெடுவிற்குள் ஏலத்தொகை, சரக்கு மற்றும் சேவைவரி செலுத்த தவறினால் அன்னார் ஏற்கெனவே செலுத்திய தொகை பறிமுதல் செய்து அரசு கணக்கில் செலுத்தப்படும். அதன்பின்னர் ஏலதாரரின் எந்தவொரு கோரிக்கையும் ஏற்கப்படமாட்டாது.

14) பகிரங்க ஏலம் மற்றும் பொது ஏலம் (Auction Cum Tender) நடைபெறும் நாளுக்கு முந்தைய நாள் மாலை 17.00-மணி வரை தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி அலுவலகத்தில் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக்கொள்ளலாம்.

15) பகிரங்க ஏலம் மற்றும் பொது ஏலம் மூலம் அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி அனுப்பும் முறைகள் சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்கு சென்று பார்வையிட்டு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவோ, அல்லது, நேரடியாக சென்று வாய்மொழி ஏலமோ கேட்கவேண்டும்.

16) பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப்பணித்துறை அலுவலகத்தால், ஏலநாளில் முற்பகல் 10.00 மணிவரை பெறப்படும்.

17) ஏலத்தில் கலந்துக்கொள்ளும் ஒவ்வொரு நபரிடமிருந்து நுழைவு கட்டணமாக **ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) வசூலிக்கப்படும்.** இத்தொகை திருப்பித்தரப்படாத தொகையாகும்.

18) மேலும், பொது ஏலத்தில் உள்ள வாகனங்களை டெண்டர் படிவம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கபடவிருக்கும் ஏலதாரர் அந்தந்த வாகனங்களுக்கேற்ப குறிப்பிடப்பட்டுள்ள பிணைத்தொகைக்கான வங்கி வரைவோலையை இணைத்து அனுப்பவேண்டும்.

19) வெற்றிபெறும் ஏலதாரர் பொது ஏலத்தில் ஒவ்வொரு வாகனத்திற்கும் அவர் ஏலத்தில் கோரிய தொகை ஏலம் நடந்த நாளன்று மாலை 5.00 மணிக்குள் செலுத்தவேண்டும்.

20) EMD தொகைக்கான வங்கிவரைவோலைகள் அறிவிக்கபட்டுள்ள ஏலம் நடைபெறவுள்ள நாளுக்கு முன்னர் 15 நாட்களுக்குள் எடுக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும். ஏலத்திற்குண்டான வரைவோலைகள் தீயணைப்புத்துறை அலுவலகத்தில் ஏலம் நடைபெறவுள்ள நாளுக்கு முன்னர் 15 நாட்களுக்குள் எடுக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

21) மொத்த ஏலத்தொகையும் சரக்கு மற்றும் சேவை வரியும் தனித்தனி காசோலையாக பாக்கி இல்லாமல் செலுத்திய ஏலதாரருக்கு, செலுத்திய வங்கிவரைவோலைகள் வங்கியில் செலுத்தப்பட்ட Remittance தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை அலுவலக கணக்குப்பிரிவிலிருந்து பெறப்பட்ட பின்பு 15 நாட்களுக்குள் நேரடியாக ஏலத்தாரின் மாதிரி கையொப்பம் வாகன விடுவிப்பு ஆணை படிவத்தில் பெறப்பட்டு வழங்கப்படும்.

22) வெற்றி பெறும் ஏலதாரர் ஒப்பந்த படிவத்தில் இடப்பட்ட கையொப்பமும், வாகன விடுவிப்பு உத்தரவில் இடப்படும் கையொப்பமும் வித்தியாசப்படுமாயின் வாகன விடுவிப்பு உத்தரவு வழங்கப்படமாட்டாது.

23) ஏலதாரர் டெண்டர் படிவம் சமர்ப்பிக்கும்போது கீழ்காணும் அடையாள ஆவணங்களான

(1) ஆதார்அட்டை

(2) பாஸ்போர்ட்'

(3) ஓட்டுநர் உரிமம்

(4) வாக்காளர் அடையாள அட்டை, (5) பான்அட்டை

(6) அரசால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய ஆவணம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றின் சுய கையொப்பமிட்ட நகலுடன் ஏலபட்டியலுடன் சமர்ப்பிக்கவேண்டும். மேலும், நிறுவனங்களின் பெயரில் டெண்டர் விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது நிறுவனத்தில் அங்கிகரிக்கப்பட்ட நபருக்கு உரிய மேற்குறிப்பிட்ட அடையாள ஆவணங்களின் நகல்கள் மற்றும் நபரினை அங்கிகரித்து நிறுவனம் அளித்துள்ள கடிதத்துடன் விண்ணப்பிக்கவேண்டும். மேலும், வாகன விடுவிப்பாணை வழங்கும்போது ஏலவிண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது அளித்திருந்த மேற்கூறப்பட்ட புகைப்பட ஆதாரங்களின் அசல் ஆவணங்களை சமர்பித்து விடுவிப்பாணை பெறவேண்டும்.

24) வாகனவிடுவிப்பாணை ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயருக்கு வழங்கப்படாது. அன்னாரின் அங்கிகாரம் பெற்றவரின் பெயருக்கு விடுவிப்பாணை வழங்க வேண்டுமெனில் அங்கிகாரம் பெற்றவரின் அடையாளத்தை காட்டும் வகையில் கீழ்கண்ட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றில் ஓர் அரசு பதிவு பெற்ற அதிகாரியின் சான்றொப்பம் பெற்று சமர்ப்பித்தல் மட்டுமே அங்கிகாரம் அளித்தவரின் பெயரில் வாகன விடுவிப்பாணை வழங்கப்படும்.

25) அடையாளத்தை காட்டுகின்ற ஆவணங்கள் கீழ்வருவன

1) ஆதார்அட்டை
2) பாஸ்போர்ட்'
3) ஓட்டுநர் உரிமம்
4) வாக்காளர் அடையாள அட்டை
5) பான்அட்டை
6) அரசால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய ஆவணங்கள்

26) இந்த அலுவலகத்திலிருந்து வாகன விடுவிப்பு பெற்றுக்கொண்ட 45 தினங்களுக்குள் ஏலதாரர் வாகனம் இருக்குமிடம் சென்று வாகனத்தை பெற்றுக்கொள்ளவேண்டும். 45 - நாட்கள் கடந்தும் வாகனத்தை எடுத்துக்கொள்ளாவிட்டால் ஏற்படும் காலதாமதத்திற்கு கொட்டகை வாடகை நாள் ஒன்றிற்கு ரூ.100/- வீதம் வசூலிக்கப்படும். மேலும், 60 நாட்கள் (இரண்டுமாத கால கொட்டகை வாடகை தொகை செலுத்தி பெற்றுக்கொள்ள கால அவகாசம் வழங்கப்படுகிறது.)

அந்த காலத்திற்குள் ஏலதாரர் வாகனத்தை விடுவித்துக்கொள்ளவில்லை என்றால் அவ்வாகனங்களை ஏலதாரர் எடுத்துக்கொள்ள விரும்பத்தகாதவராக உள்ளார் என கருதப்பட்டு மறு ஏலத்தில் சேர்த்து விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் ஏலதாரர் செலுத்திய தொகை அரசு கணக்கில் செலுத்தப்படும் என்பதை ஏலதாரர்களுக்கு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும், மேற்கண்டவாறு உரிய காலத்திற்குள் வாகனத்தை Delivery எடுத்துக்கொள்ளாத ஏலதாரரால் தெரிவிக்கப்படும் எந்த கோரிக்கையும் ஏற்கப்படமாட்டாது. மேலும், Central Motor Vehicle Rules – 1989 விதி எண்:57,(1) –ன்படி வாகனத்தை Delivery எடுத்த ஏலதாரர் வாகனம் Delivery எடுத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் Central Motor Vehicle விதி எண்:32-ன்படி தொடர்புடைய RTO அலுவலகம் மூலம் வாகனத்தின் G-Surrender சான்றிதழை வைத்து வாகனம் உரிமையாளரின் பெயரில் பதிவுசெய்யப்படவேண்டும். மாற்றம் செய்யப்பட்ட விவரத்தினை சம்மந்தப்பட்ட வாகன அலுவலகத்திற்கு தெரிவிக்கப்படவேண்டும். இவ்வாறு மாற்றம் செய்யப்படாமல் வாகனத்தை பயன்படுத்தினால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு ஏலதாரரே முழு பொறுப்பு எனவும், தீயணைப்புத்துறை பொறுப்பு ஏற்க இயலாது.

27) தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை வாகனத்தை இவ்வலுவலக விடுவிப்பாணை மூலம் டெலிவரி எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர், அந்த வாகனத்திற்கு ஏற்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஏலதாரரே முழு பொறுப்பாவார் எனவும், வாகனம் டெலிவரி கொடுத்த பின்னர் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை எந்த விதத்திலும் பொறுப்பு ஏற்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

28) ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடும் தொகையானது விற்பனை வரி சேராத நிகர தொகையாகும்.

29) சரக்கு மற்றும் சேவை வரியானது அரசின் ஆணைப்படி அவ்வப்போது அமலில் இருக்கும் விகிதத்தின்படி வசூலிக்கப்படும்.

30) ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர் மட்டுமே கையொப்பமிட்டு இருக்க வேண்டும். வேறொருவர் கையொப்பமிட்டு இருந்தால் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்படும். EMD தொகை பறிமுதல் செய்யப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்படும்.

31) ஏலதாரர்கள் ஒரு வாகனத்திற்கு இருவர் ஒரே விலைப்புள்ளியை (TIE rate) குறிப்பிட்டிருக்கும் பட்சத்தில் கீழ்கண்டவாறு ஏலக்குழுவின் முன்னிலையில் விலை நிர்ணயம் செய்யப்படும் ஒரே விலை கோரியுள்ள ஏலதாரர்கள் கீழ்குறிப்பிடப்பட்டிருக்கும் தொகையின் மடங்கில் விலைப்புள்ளியை டெண்டர் படிவத்தில் குறிப்பிட்டு ஏலக்குழுவினரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதை ஏலக்குழுவினர் ஏலதாரர்கள் முன்னிலையில் உறையை பிரித்து விலைப்புள்ளியில் கோரியுள்ள தொகையை அறிவிக்க வேண்டும்.

1) Light Motor vehicle - இலகுரக வாகனம் - ரூ.500/- குறைந்தபட்ட கூடுதலான விலைப்புள்ளி அளிக்க வேண்டும்.

2) Heavy vehicle - கனரக வாகனம் - ரூ.1000/- குறைந்தபட்ட கூடுதலான விலைப்புள்ளி அளிக்க வேண்டும்.

மேற்சொன்ன முறையில் மீண்டும் ஒரே விலைப்புள்ளி (TIE rate) –ல் இரு எலதாரர்களும் விலைப்புள்ளி அளிக்கும் பட்சத்தில் டெண்டர் கமிட்டி முன்னிலையில் குலுக்கல் முறையில் தேர்வுசெய்யப்படும்.

32) இந்த ஏல நிபந்தனையுடன் வாகனங்களின் விவரமும் அவைகள் இருக்கும் இடமும், இந்த அலுவலகத்தில் வாகனம் உள்ள நிலைப்படியே வாகனப்பட்டியல் தயாரித்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால், வாகனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் ஒவ்வொரு ஏலதாரரும் வாகனத்தை நேரில் பார்த்து மற்றும் ஆவணங்கள் பதிவுசான்று போன்றவற்றை சரிபார்த்த பின்னர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

33) வாகனத்தை பார்வையிடாமலும், ஆவணங்களை சரிபார்க்காமலும், அட்டவணையில் உள்ள விவரங்களை மட்டும் கொண்டு விலைப்புள்ளி கொடுத்து ஏற்படும் தவறுகளுக்கு தமிழ்நாடு தியணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை எந்த விதத்திலும் பொறுப்பேற்காது என தெரிவிக்கப்படுகிறது. ஆகையால், ஏலதாரர் வாகனத்தை

பார்வையிட்டு கொடுக்கப்பட்ட விபரங்களை உறுதி செய்து மன நிறைவு கொண்டால் மட்டுமே விலைப்புள்ளி கொடுக்குமாறு தெரிவிக்கப்படுகிறார்கள்.

34) ஏலதாரர்கள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வாகனங்கள் குறித்து தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறையில் ஒவ்வொரு எலதாரரும் பார்வையிட்டு தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களுடன் வாகனங்கள் உள்ளபடியான நிலையில் உள்ளதா என சரிபார்த்துக்கொண்டு கையொப்பமிடவேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

35) மேற்படி, நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் உறுதியாக்கம் செய்து விடுவிப்பு உத்தரவுகள் வழங்கப்பட்டபின் விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் அது தொடர்பான ஏதேனும் குறைகள் இருந்தால் அது தொடர்பான வழக்குப்பதிவு செய்வதாக இருப்பின் அவ்வழக்கானது சென்னை உயர்நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்யப்படவேண்டும் என்று இதன் மூலம் ஏலதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

36) எந்தவொரு ஊர்திக்கும் பெறப்படும் விலைப்புள்ளியை ஏற்கவோ அல்லது எந்த காரணமும் குறிப்பிடாமல் நிராகரிக்க தமிழ்நாடு தீயணைப்பு மீட்புப்பணித்துறை ஏலக்குழு தலைவர் முழு அதிகாரம் பெற்றவர் என அறிவிக்கப்படுகிறது.

37) விளம்பரம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தை எந்த நேரத்திலும் நாள் மற்றும் நேரம் மாற்றி அமைக்க அல்லது முற்றிலும் ரத்து செய்ய தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறை ஏலக்குழு தலைவர் முழு அதிகாரம் பெற்றவர் என அறிவிக்கப்படுகிறது.

* * * * * * * *

**Central Region, Trichirappalli**

**Details Of the Condemned Vehicles**

| S.No | Type Of Vehicle | Regn No: | Model (Year) | Parking Place at Fire and Rescue Service Staion |
|---|---|---|---|---|
| 1. | Water Tender | TN 38 G 0314 | Ashok Layland 1999 | Srirangam 94450 86403 |
| 2. | Water Tender | TN 38 G 0153 | Ashok Layland 1997 | Cuddalore 94450 86408 |
| 3. | Water Tender | TN 37 G 0101 | Ashok Layland 1988 | Cuddalore 94450 86408 |
| 4. | Water Tender | TN 45 G 0032 | Ashok Layland 1988 | Chidambaram 94450 86409 |
| 5. | Water Tender | TN 38 G 0126 | Ashok Layland 1997 | Kuthalam 94450 86432 |
| 6. | Water Tender | TN 66 G 0078 | Ashok Layland 2009 | Mayiladuthurai 94450 86433 |
| 7. | Water Tender | TN 38 G 0731 | Ashok Layland 2007 | Thiruvarur 94450 86470 |
| 8. | Water Tender | TN 38 G 0618 | Ashok Layland 2004 | Nannilam 94450 86482 |
| 9. | Water Tender | TN 38 G 0725 | Ashok Layland 2006 | Thirumakottai 94450 86484 |
| 10. | Water Tender | TN 38 G 0712 | Ashok Layland 2005 | Thiruthuraipoondi 94450 86485 |
| 11. | Water Tender | TN 32 G 0111 | Ashok Layland 1995 | Vanur 94450 86499 |
| 12. | Water Tender | TN 38 G 0623 | Ashok Layland 2004 | Villupuram 94450 86489 |
| 13. | Water Tender | TN 38 G 0608 | Ashok Layland 2004 | Thirukoilur 94450 86496 |
| 14. | Water Tender | TN 38 G 0616 | Ashok Layland 2004 | Thirukattupalli 94450 86465 |
| 15. | Water Tender | TN 38 G 0154 | Ashok Layland 1998 | Jegathapattinam 94450 86457 |
| 16. | Water Tender | TN 38 G 0392 | Ashok Layland 1999 | Sendurai 94450 86444 |
| 17. | Water Tender | TN 38 G 0601 | Ashok Layland 2005 | Ariyalur 94450 86442 |

| | | | | |
|---|---|---|---|---|
| 18. | Water Lorry | TN 01 G 0796 | Ashok Layland 1995 | Chidambaram 94450 86409 |
| 19. | Ambulance | TN 22 G 0591 | Force 2007 | Tanjore 94450 86465 |
| 20. | Ambulance | TN 01 G 1305 | Suraji Mastha 2000 | Kallakurichi 94450 86491 |
| 21. | Ambualance | TN 01 G 1304 | Suraji Mastha 2000 | Cuddalore 94450 86408 |
| 22. | Ambulance | TN 01 G 2056 | Mahindra 2002 | Kumbakonam 94450 86466 |
| 23. | Ambulance | TN 22 G 0526 | Force 2007 | Nagapattinam 94450 86430 |
| 24. | Ambulance | TN 01 G 2067 | Mahindra &Mahindra 2002 | Pudukottai 94450 86451 |
| 25. | Ambulance | TN 01 G 2059 | Mahindra 2003 | Thiruvarur 94450 86476 |
| 26. | Ambulance | TN 22 G 0529 | Force 2007 | Mannargudi 94450 86480 |
| 27. | Car | TN 01 G 2718 | Ambassador 2005 | Tanjore 94450 86465 |
| 28. | Car | TN 01 G 0438 | Ambassador 1992 | Karur 94450 86424 |
| 29. | Two wheeler | TN 01 G 4458 | Hero Honda 2009 | Pattukottai 94450 86469 |

## Abstract

| | |
|---|---|
| Water Tender | 17 |
| Water Lorry | 1 |
| Ambulance | 8 |
| Car | 2 |
| Two wheeler | 1 |
| **Total** | **29** |